DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 206/2014 PW : 2

Name : தனசேகர் Age – 61

S/o : சந்திரன் Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 09.02.2026

**5 முதல் 12 மற்றும் 24 முதல் 26 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலைுரையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் அவர்களுடைய பதிலுரையில் 7 ஆவணங்கள் மூலமாக கிரையம் பெற்றதாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. இந்த ஆவணங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் என்றாலும் அதை பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றாலும் அந்த ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்று தாக்கல் செய்த வழக்கு தவறு என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் என் பதில் தாக்கல் செய்துள்ளார்கள் என்பதை நான் வழக்கறிஞர் மூலமாக கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. வா.சா.ஆ.8 முதல் 12 ஆவணங்கள் சர்வே எண்.129/3 சம்மந்தப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.8 முதல் 12 வரையிலான ஆவணங்களில் 18வது column–ல் வீடுகள் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) வா.சா.ஆ.8 ஆவணம் 1975 ஆண்டிற்குண்டான ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ஆவணம் 1987 ஆண்டிற்குண்டான ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ஆவணம் 1991 ஆண்டிற்குண்டான ஆவணம் என்றால் சரிதான். அந்த அடங்கல் இடையில் மாற்றப்பட்ட விபரம் எனக்கு தெரியாது. நான்

இந்த வழக்கை தாக்கல் செய்தவற்கு முன்பு யோகநாதன் வீடு கட்ட முயற்சிக்கும் போது நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அப்போதே சொத்தின் அனைத்து விபரங்கள் அவர் SP office–ல் பதில் கொடுத்தார் என்றால் அவ்வாறு எந்த வித பதிலும் கொடுக்கவில்லை. சர்வே எண்.129/3 தற்போது சர்வே எண்.174/12 to 174/19 ஆக மாற்றப்பட்டுள்ளது என்றால் வீட்டு கட்டும் போது அந்த விபரம் எனக்கு தெரியும். தாவா சொத்திற்கு வடக்கே பஜனை கோவில் உள்ளது என்றால் சரிதான். மேற்கு விநாயகர் கோவில் தெரு உள்ளது என்றால் சரிதான். தெரு விநாயகர் மனை தாண்டி தான் வருகிறது. தாவா சொத்திற்கு தெற்கு பக்கம் சீனிவாசன் வீடு உள்ளது என்றால் சரிதான். ராஜாவேல் முதலியாருக்கு காலி மனை உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. சாந்தம்மாளுக்கு வீடு உள்ளது என்றால் அங்கு இல்லை கோவில் மனை தான் உள்ளது. அவர்கள் வீடு கட்ட முயற்சிக்கும் போது தான் நான் வழக்கு தாக்கல் செய்தேன். தாவா சொத்தில் ஒரு பகுதியை சாந்தம்மாள் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. ரூக்மணி, யோகநாதன் ஆகியோர் அனுபவித்தில் தாவா சொத்து உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் ஆகியோர் கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

3) வா.சா.1 என்னுடைய சித்தப்பா. வா.சா.1 தாவா சொத்தில் அனைவரும் வீடுகட்டி அனுபவித்து வருகிறார்கள் என்று தாவாவில் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் அவர்கள் கோவில் மனையில் தான் வசித்து வருகிறார்கள். செங்கல்வராயன் வாரிசுதாரர்களுக்கு தாவா சொத்தில் உரிமை உள்ளது என்றால் சரிதான். செங்கல்வராயன் வாரிசுதாரர்கள் தாவா சொத்துக்களை வாய்மொழியாக பாகப்பிரித்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு பாகத்தில் வந்த சொத்தில் தான் பாகஸ்தர்கள் 3ம் நபர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. இன்றைய தேதி வரை தாவா சொத்து உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அதில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. இந்த விபரங்கள் அனைத்து நன்கு தெரியும் என்றாலும் நான் அனைத்தும் மறைத்து வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. காலம்

தாழ்த்தி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**31 முதல் 38 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய ஒத்திவைக்கப்படுகிறது**

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2026.02.09 17:46:28 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.